**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.57/2025**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 24.02.2026 | | |
| பெயர்: | அருள்குமார் (PW–1 Chief ) | தகப்பனார் பெயர்: | கலியபெருமாள் |
| கிராமம்: | சீர்காழி டவுன் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | கிளைமேலாளர் | வயது : | 35/2026 |

<u>**முதல் விசாரணை : 24.02.2026**</u>

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 19.05.2023 தேதியிட்ட கடன் ஒப்பந்த சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகவும்

2. 14.11.2024 தேதியிட்ட எனக்கு எனது வங்கியால் வழங்கப்பட்ட அதிகார கடிதம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகவும்

3. 08.01.2025 தேதியிட்ட பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் கையிருப்பு நகல் **வா.சா.ஆ.3** ஆகவும்

4. 11.01.2025 தேதியிட்ட மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான

Track Report–ன் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.4** ஆகவும்,

5. பிரதிவாதியின் கடன் நிலுவை தொடர்பான அறிக்கை **வா.சா.ஆ.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி ஏற்கனவே தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை இல்லை.